சுருக்கம்

வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – திருவள்ளூர் மாவட்டம் – பள்ளிப்பட்டு வருவாய் வட்டத்தினைப் பிரித்து ஆர்.கே.பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி.1(1) பிரிவு

அரசாணை (நிலை) எண்.61 நாள்: 18.02.2019,

விளம்பி வருடம், மாசி 6,
திருவள்ளுவர் ஆண்டு 2050.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.279, வருவாய்த்[வ.நி.1(1)]துறை, நாள் 9.6.2003.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ந.க._பணி 3 (4) / 14822/ 2018, நாள் 27.12.2018.

*********

ஆணை:

திருவள்ளூர் மாவட்டத்தில் 03.09.2017 அன்று நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தொடர்பாக கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

> **"திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்திலிருந்து ஆர்.கே.பேட்டை பகுதியை பிரித்து புதிய வட்டம் உருவாக்குவது தொடர்பான கோரிக்கையினை அரசு பரிசீலித்து ஆவன செய்யும்".**

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டத்தில் பள்ளிப்பட்டு வருவாய் வட்டத்தினை இரண்டாகப் பிரித்த பின்னர் புதிதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஆர்.கே.பேட்டை வருவாய் வட்டம் பார்வை 1–இல் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவு கோல்களின்படி, வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 30 என்பதற்கு பதிலாக 20 ஆகவும் மற்றும் 2 அல்லது 3 முழுமையான ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் என்ற அளவுகோல்களுக்கு மாறாக பள்ளிப்பட்டு மற்றும் ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பகுதியளவு மட்டுமே உள்ளடக்கியதாக இருப்பதாலும், மற்றும் வட்ட பிரிவினைக்குப் பின் பள்ளிப்பட்டு வருவாய் வட்டத்தின் பரப்பளவு மற்றும் மக்கள் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அளவுகோல்களுக்கு குறைவாக இருப்பதாலும், முன்மொழிவு நிராகரிக்கப்பட்ட நிலையில், உயர்மட்டக் குழுவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளுக்கு தளர்வு வழங்கி திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வருவாய் வட்டத்தினைப் பிரித்து ஆர்.கே.பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு, புதிய வருவாய் வட்டம் உருவாக்கும் கருத்துருவினை ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி 37 வருவாய் மற்றும்

//த.பி.பா.//

மதுரா கிராமங்களை உள்ளடக்கிய 3 குறுவட்டங்களுடன் ஆர்.கே.பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு ஆர்.கே.பேட்டை புதிய வருவாய் வட்டம் உருவாக்கலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. மேலும், தற்போதைய பள்ளிப்பட்டு வருவாய் வட்டம் மற்றும் புதிதாக உருவாக்கப்படும் ஆர்.கே.பேட்டை வருவாய் வட்டம் ஆகியவற்றின் ஆட்சி எல்லைகள் தொடர்பான அடிப்படை விவரங்களை தெரிவித்துள்ளதோடு புதிதாக உருவாக்கப்படவுள்ள ஆர்.கே.பேட்டை வருவாய் வட்டத்திற்கு பொதுப்பிரிவு, சமூகப் பாதுகாப்புத் திட்டம், தேர்தல் பிரிவு, வட்ட வழங்கல் பிரிவு மற்றும் கிராம நிருவாகம் ஆகிய பிரிவுகளுக்கு 22 பணியிடங்கள் மற்றும் நிலஅளவைப் பிரிவிற்கு 5 பணியிடங்கள் என ஆக மொத்தம் 27 பணியிடங்கள் புதியதாக உருவாக்கிட வேண்டும் என்றும், வட்டப் பிரிவினைக்குப்பின், பள்ளிப்பட்டு வருவாய் வட்டத்தில் மிகைப் பணியிடங்களாக உள்ள 4 பணியிடங்களை கலைத்திடவும் மற்றும் 2 புதிய பணியிடங்களை உருவாக்கிடவும், புதியதாக உருவாக்கப்படவுள்ள ஆர்.கே.பேட்டை வருவாய் வட்டத்திற்கு தோராயமாக ஓராண்டிற்கான தொடரும் செலவினமாக ரூ.1,94,55,252/–ம் தொடராச் செலவினமாக ரூ.28,49,446/–ம் ஒப்பளிப்பு செய்து வழங்கிடுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) திருவள்ளூர் மாவட்டத்தில், பள்ளிப்பட்டு வருவாய் வட்டத்தினைப் பிரித்து ஆர்.கே.பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆர்.கே.பேட்டை, எரும்பி மற்றும் பாலாபுரம் ஆகிய மூன்று குறுவட்டங்கள் மற்றும் 37 கிராமங்களுடன் (22 வருவாய் கிராமங்கள் + 15 மதுரா கிராமங்கள்) ஆர்.கே.பேட்டை புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) உருவாக்கப்படவுள்ள ஆர்.கே.பேட்டை புதிய வருவாய் வட்டத்திற்கு மொத்தமுள்ள 108 பணியிடங்களில் 86 பணியிடங்களை மறுபரவலமர்த்தல் மூலமும், 18 பணியிடங்களை வருவாய்த் துறைக்கும், 4 பணியிடங்களை நில அளவைத்துறைக்கும் ஆக மொத்தம் 22 பணியிடங்களை (இணைப்பு 1a–இல் உள்ளபடி) புதியதாக உருவாக்குவதன் மூலமும் தோற்றுவிக்கப்படுகிறது. மேலும், ஏற்கனவே செயல்பட்டு வரும் பள்ளிப்பட்டு வருவாய் வட்டத்திற்கு 2 புதிய பணியிடங்கள் (இணைப்பு 1b–இல் உள்ளபடி) உருவாக்கப்படுகிறது.

(iii) உருவாக்கப்படவுள்ள ஆர்.கே.பேட்டை வருவாய் வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.1,51,86,624/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தொறு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து அறுநூற்று இருபத்து நான்கு மட்டும்) மற்றும் தொடராச் செலவினமாக ரூ.18,82,446/– (ரூபாய் பதினெட்டு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தாறு மட்டும்) (இணைப்பு III–இல் உள்ளபடி) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. மேலும், ஏற்கனவே செயல்பட்டு வரும் பள்ளிப்பட்டு வருவாய் வட்டத்திற்கு

..3..

புதியதாக உருவாக்கப்படவுள்ள 2 பணியிடங்களுக்கான பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் தொடர்பாக ஆண்டொன்றுக்கு தோராயமாக ரூ.1,40,124/– (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்து நூற்று இருபத்து நான்கு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iv) குரூப் கிராமங்களை பிரித்து புதியதாக குரூப் கிராமங்களை உருவாக்குதல் தொடர்பாக நடைமுறையில் உள்ள விதிமுறைகள், சட்டம் மற்றும் அரசாணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(v) இரவுக் காவலர், மசால்சி, புல உதவியாளர் போன்ற பணியிடங்கள் அரசு ஆணை (நிலை) எண்.49, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 14.5.2002–இன்படி வெளிமுகமை (outsourcing) மூலமாக ஒப்பந்த (contract) அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

(vi) அலுவலக உதவியாளர் பணியிடங்களை தமிழ்நாடு அடிப்படைப்பணிக்கான சிறப்பு விதிகளில், விதி–4(a) (நியமனம்)–ஐயும், அரசாணை (நிலை) எண்.44, தொ(ம)வே.வா.துறை, நாள் 11.03.2015–ஐயும் உடன் நிகழ்வாக பின்பற்றப்படுவதுடன், நடைமுறையில் உள்ள உரிய விதிகள்/ சட்டம்/ அரசாணைகளை பின்பற்றி நிரப்பப்பட வேண்டும்.

(vii) மறுபரவலமர்த்தல் மூலம் பள்ளிப்பட்டு வருவாய் வட்டத்திலிருந்து ஆர்.கே.பேட்டை வருவாய் வட்டத்திற்கு மாற்றப்பட வேண்டிய பணியிடங்கள் அப்பணியிடங்–களுக்குரிய தளவாடங்களுடன் ஆர்.கே.பேட்டை வருவாய் வட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

(viii) இது ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும் என்பதால் புதுப்பணி தொடர்பான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(ix) ஏற்கனவே உள்ள வட்டங்களில், வட்டப் பிரிவினைக்குப்பின் உள்ள பணியிடங்கள் பொதுவான பணியாளர் மாதிரியில் (Generalized Staff Pattern) வரையறுத்துள்ளவற்றிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(x) அவ்வாறு மிகைப்பணியிடமாக கண்டறியப்பட்ட பணியிடங்கள் அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும் அல்லது தேவைப்படும் இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். இல்லையெனில், புதிய வருவாய் வட்டம் துவக்கப்பட்டவுடன் அப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக வைக்கப்பட வேண்டும். அப்பணியிடங்களுக்கு சம்பளம் பெற்று வழங்கக் கூடாது.

(xi) அலுவகத்திற்கான வாடகை பொதுப்பணித்துறை பரிந்துரையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பெற்று வழங்க வேண்டும்.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

## I பணியாளர் சம்பளங்கள்

சம்பளம் மற்றும் தகுதியுள்ள பிறபடிகள் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மறுபரவலமர்த்தப்பட்ட பணியிடங்களுக்கு கீழக்கண்ட கணக்குத் தலைப்பு / உப தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

(i) வருவாய் பணியிடங்கள்
2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –மாநிலச் செலவினங்கள் –AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(ii) தேர்தல் பணியிடங்கள்
2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –மாநிலச் செலவினங்கள் –AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(iii) நில அளவைப் பணியிடங்கள்
2029–00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – மாநிலச் செலவினங்கள்–AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2029 00 102 AF 0105)

(iv) குடிமைப் பொருள் பணியிடங்கள்
3456–00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் AB மாவட்ட பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 3456 00 001 AB 0108)

**II 2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – மாநிலச் செலவினங்கள் – AB வட்டப் பணியாளரமைப்புகள்**

(அ) 05 அலுவலகச் செலவுகள் 01 தொலைபேசிக் கட்டணங்கள் ரூ.31,500/–
தொடரும் செலவினம் ரூ.25,500/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0513)

(ஆ) 05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

(இ) 05 அலுவலகச் செலவுகள் – 05 அறைகலன்கள் ரூ.4,00,000/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(ஈ) 06 வாடகை; கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை
(பொதுப்பணித்துறையின் இறுதி திட்ட மதிப்பீட்டிற்கு உட்பட்டது)
(த.தொ.கு 2053 00 094 AB 0611)

(உ) 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ.1,10,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

..5..

(ஊ) <u>21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.12,61,446/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(எ) <u>45பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,92,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(ஏ) <u>76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,05,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணியாகும் (New Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு ஒப்புதல் பெறும்வரை தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி விதிகள் 1963–இன் இணைப்பிலுள்ள படிவம் 'அ'–ன்படி இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் வட்டம் 18.02.2019–ஆம் நாள் முதல் செயல்படும்.

8. ஆர்.கே.பேட்டை வருவாய் வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 5–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இந்த அரசாணை நிதித்துறையின் கோப்பு எண்.7423/நிதி(வருவாய்)/2019, நாள் 18.02.2019 மற்றும் அ.சா.கு.எண்.8081/மை.ம.ஆபி/2019, நாள் 18.02.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2764 (இரண்டாயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–600 079.
(அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
கூடுதல் தலைமைச் செயலாளர்/
வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–600 005
கூடுதல் தலைமைச் செயலாளர்/ நில நிருவாக ஆணையர், சென்னை–600 005.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர்/ ஆணையர், நகர்ப்புற
நிலஉச்சவரம்பு (ம) நகர்ப்புற நிலவரித்துறை, சென்னை–600 005
கூடுதல் தலைமைச் செயலாளர்/ நிலச் சீர்திருத்த ஆணையர், சென்னை–600 005.
இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–600 005.
ஆணையர், குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர்பாதுகாப்பு, சென்னை–600 005.

//த.பி.பா.//

மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர் மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–600 018.
மாநில கணக்காயர் (துணிக்கை),சென்னை–600 018. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (துணிக்கை),சென்னை–600018.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–600 009.
மாநில கணக்காயர் (RAO) சென்னை–600 009.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–600 002.
அனைத்துத் துறை தலைவர்கள்/ அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–600 104.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை–600 009.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை–600 015.
இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம்,
இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை–600 090.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர், (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை)
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
நிதித் (வ.செ.பொது–I/ வ.செ.பொது–II/வருவாய்/கக–3/கூஉ(ம)நுபா/
பொதுப்பணி- I/மை.மஆபி) துறை, சென்னை–600 009.
சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/2/19

பிரிவு அலுவலர்

18/2/19

## இணைப்பு - I (a)

**அரசாணை (நிலை) எண்.61, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019 ஆர்.கே.பேட்டை புதிய வருவாய் வட்டத்திற்கு புதியதாக ஒப்பளிக்கப்படும் பணியிடங்கள்**

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | ஊதிய விகிதம் (in pay revised scale) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ | பொதுப்பிரிவு | | |
| 1 | வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/– நிலை–20, ரூ.37,700/– ரூ.1,19,500/– | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/– நிலை–18, ரூ.36,900/– ரூ.1,16,600/– | 1 |
| 3 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/– நிலை –8, ரூ.19,500/– ரூ.62,000/– | 1 |
| 4 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/– நிலை–2, ரூ.15,900/– ரூ.50,400/– | 1 |
| 5 | ஈப்பு ஓட்டுநர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/– நிலை–1, ரூ.15,700/– ரூ.50,000/– | 2 |
| 7 | இரவுக்காவலர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002–ன்படி | 1 |
| 8 | மசால்சி (Masalchi) | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002–ன்படி | 1 |
| ஆ | சமூக பாதுகாப்புத்திட்டம் | | |
| 9 | தனி வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/– நிலை–20, ரூ.37,700/– ரூ.1,19,500/– | 1 |
| 10 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/– நிலை –8, ரூ.19,500/– ரூ.62,000/– | 1 |
| 11 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/– நிலை–2, ரூ.15,900/– ரூ.50,400/– | 1 |
| 12 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/– நிலை–1, ரூ.15,700/– ரூ.50,000/– | 1 |
| 13 | ஈப்பு ஓட்டுனர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| இ | தேர்தல் பிரிவு | | |
| 14 | துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/– நிலை–18, ரூ.36,900/– ரூ.1,16,600/– | 1 |
| 15 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/– நிலை–10, ரூ.20,600/– ரூ.65,500/– | 1 |
| ஈ | வட்ட வழங்கல் பிரிவு | | |
| 16 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/– நிலை–10, ரூ.20,600/– ரூ.65,500/– | 1 |
| 17 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/– நிலை–1, ரூ.15,700/– ரூ.50,000/– | 1 |
| ஈ | நில அளவைப்பிரிவு | | |
| 18 | வட்ட துணை ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,600/– நிலை–12, ரூ.35,600/– ரூ.1,12,800/– | 1 |
| 19 | வட்ட சார் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/– நிலை–11, ரூ.35,400/– ரூ.1,12,400/– | 1 |
| 20 | முதுநிலை வரைவாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/– நிலை–11, ரூ.35,400/– ரூ.1,12,400/– | 1 |
| 21 | புல உதவியாளர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002–ன்படி | 1 |
| | **மொத்தம்** | | **22** |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## இணைப்பு - I (b)

**அரசாணை (நிலை) எண்.61, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019**
**ஏற்கனவே செயல்பட்டு வரும் பள்ளிப்பட்டு வருவாய் வட்டத்திற்கு புதியதாக ஒப்பளிக்கப்படும் பணியிடங்கள்**

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | ஊதிய விகிதம் (in pay revised scale) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ | **சமூக பாதுகாப்புத்திட்டம்** | | |
| 1 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/– நிலை–2, ரூ.15,900/– ரூ.50,400/– | 1 |
| ஆ | வட்ட வழங்கல் பிரிவு | | |
| 2 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/– நிலை –8, ரூ.19,500/– ரூ.62,000/– | 1 |
| | மொத்தம் | | 2 |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு- II

**அரசாணை (நிலை) எண்.61, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019**
**புதிய கிள்ளியூர் வருவாய் வட்டத்திற்கான பணியிட விவரங்கள்**

ஆர்.கே.பேட்டை புதிய வட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் பள்ளிப்பட்டு வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் மற்றும் புதிய வட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட வேண்டிய மற்றும் புதியதாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் ஆகியவற்றின் விவரம் பொதுவான பணியாளர் மாதிரியின்படி **(Generalized staff pattern)** பின்வருமாறு தரப்படுகிறது.

| வ. எண் | பணியிடங்கள் | தற்காலிகம் / நிரந்தரம் | பள்ளிப்பட்டு வட்டத்தின் தற்போதைய பணியிடங்கள் | வட்டப் பிரிவினைக்குப் பின்னர் பள்ளிப்பட்டு வட்டத்தின் பணியிடங்கள் | | | உத்தேசிக்கப்பட்டுள்ள ஆர்.கே. பேட்டை வட்டத்தின் பணியிடங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | கலைக்கப்பட வேண்டிய மிகைப் பணியிடங்கள் | புதிதாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மாறுதல் செய்யப்பட வேண்டியன | புதியதாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| அ. பொதுப்பிரிவு | | | | | | | | | |
| 1. | வட்டாட்சியர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | நி | 1 | 1 | - | | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | நி | 2 | 0 | 0 **(1a)** | - | 1 | - | 1 |
| | | த | - | - | - | | - | - | - |
| 4 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 6 | 2 | 0 **(1b)** | - | 3 | - | 3 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 5 | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நி | 5 | 2 | - | - | 3 | - | 3 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 6 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 8 | 2 | 2(***) (1c)+(1d) | - | 2 | - | 2 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 7 | தட்டச்சர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | | - | - | 1 | 1 |
| 8 | பதிவறை எழுத்தர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | | - | - | 1 | 1 |
| 9 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | | - | - | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | நி | 7 | 4 | - | - | 3 | - | 3 |
| | | த | - | - | - | - | - | 2 | 2 |

//க.பி.பா.//

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | இரவுக் காவலர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 12 | மசால்சி (Masalchi) | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| | மொத்தம் | | **35** | **17** | **2** | **0** | **12** | **9** | **21** |
| ஆ.சமூகப் பாதுகாப்புத்திட்ட பிரிவு | | | | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 1 | 1 | - | - | **1b** (பொது) | 0 | 1 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 3 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 1 | 1 | - | - | **1c** (பொது) | 0 | 1 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 4 | தட்டச்சர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 5 | பதிவறை எழுத்தர் | நி | - | - | - | - | - | - | - |
| | | த | - | - | - | 1 | - | 1 | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | நி | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 7 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| | மொத்தம் | | **6** | **6** | **0** | **1** | **2** | **5** | **7** |
| இ.தேர்தல் பிரிவு | | | | | | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | நி | - | . | . | . | . | - | - |
| | | த | 1 | 1 | . | . | . | 1 | 1 |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | - | . | . | . | . | - | - |
| | | த | 1 | 1 | . | . | . | 1 | 1 |
| | மொத்தம் | | **2** | **2** | **0** | **0** | **0** | **2** | **2** |
| ஈ.வட்ட வழங்கல் பிரிவு | | | | | | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | நி | - | - | - | - | **1a** (பொது) | - | 1 |
| | | த | 1 | 1 | - | - | - | - | - |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |

..3..

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | - | - | - | - | 1d | - | 1 |
| | | த | - | - | - | 1 | - | - | - |
| 4 | தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 2 | 1 | - | - | 1 | - | 1 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 5 | அலுவலக உதவியாளர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| மொத்தம் | | | **5** | **4** | **0** | **1** | **3** | **2** | **5** |
| **உ) கிராம நிருவாகம்** | | | | | | | | | |
| 1 | கிராம நிருவாக அலுவலர் | நி | 70 | 37 | - | - | 33 | - | 33 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 2 | கிராம உதவியாளர் | நி | 70 | 37 | - | - | 33 | - | 33 |
| | | த | - | - | - | - | - | - | - |
| மொத்தம் | | | **140** | **74** | **0** | **0** | **66** | **0** | **66** |
| **ஊ) நில அளவைப் பிரிவு** | | | | | | | | | |
| 1. | வட்டத்துணை ஆய்வாளர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 2. | வட்ட சார் ஆய்வாளர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 3. | குறுவட்ட நிலஅளவர் | நி | 5 | 2 | - | - | 3 | - | 3 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 4 | முதுநிலை வரைவாளர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 5 | புல உதவியாளர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| மொத்தம் | | | **9** | **6** | **0** | **0** | **3** | **4** | **8** |
| ஆக மொத்தம் (அ+ஆ+இ+ஈ+உ+ஊ) | | நி | **197** | **109** | **2** | **2** | **86** | **22** | **108** |

**(1a)** பொதுப்பிரிவிலிருந்து மிகைப் பணியிடமாகக் கண்டறியப்பட்ட ஒரு மண்டல துணை வட்டாட்சியர் பணியிடத்தை வட்ட வழங்கல் பிரிவிற்கு மாற்றலாம்.

**(1b)** பொதுப்பிரிவிலிருந்து மிகைப் பணியிடமாகக் கண்டறியப்பட்ட ஒரு முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) பணியிடத்தை சமூக பாதுகாப்புத்திட்ட பிரிவிற்கு மாற்றலாம்.

**(1c)** பொதுப்பிரிவில் நான்கு மிகைப்பணியிடங்களாக கண்டறியப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) பணியிடங்களில் ஒரு பணியிடத்தை சமூக பாதுகாப்புத்திட்டத்திற்கு மாற்றலாம்.

//த.பி.பா.//

**(1d)** பொதுப்பிரிவில் நான்கு மிகைப்பணியிடங்களாக கண்டறியப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) பணியிடங்களில் ஒரு பணியிடத்தை வட்ட வழங்கல் பிரிவிற்கு மாற்றலாம்.

(***) கலைக்கப்பட வேண்டிய மிகைப் பணியிடங்கள்

<u>பள்ளிப்பட்டு வட்டத்தில் உள்ள மொத்தப் பணியிடங்கள் – 197</u>

| | |
|---|---|
| ஏற்கனவே செயல்பட்டு வரும் பள்ளிப்பட்டு வட்டத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்ட பணியிடங்கள் | – 109 |
| ஆர்.கே.பேட்டை புதிய வருவாய் வட்டத்திற்கு மறுபரவலமர்த்தல் செய்யப்படும் பணியிடங்கள் | – 86 |
| மிகைப் பணியிடங்கள் | – 2 |
| மொத்தப் பணியிடங்கள் | 197 |

<u>புதியதாக உருவாக்கப்பட்ட பணியிடங்கள் – 24</u>

| | |
|---|---|
| ஆர்.கே.பேட்டை புதிய வருவாய் வட்டம் | – 22 |
| ஏற்கனவே செயல்பட்டு வரும் பள்ளிப்பட்டு வருவாய் வட்டம் | – 2 |

<u>ஆர்.கே.பேட்டை புதிய வருவாய் வட்டத்தில் உள்ள மொத்த பணியிடங்கள் – 108</u>

மறுபரவலமர்த்தல் மூலம் ஏற்படுத்தப்பட்ட பணியிடங்கள் – 86

புதியதாக உருவாக்கப்பட்ட பணியிடங்கள் – 22

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

18/2/19
பிரிவு அலுவலர்.
18/2/19

## இணைப்பு - III

அரசாணை (நிலை) எண்.61, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019

அ) தொடரும் செலவினங்கள்

| வ. எண். | இனம் | உத்தேச ஆண்டு செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (தோராயமாக ஆண்டொன்றுக்கு கணக்கீட்டுத்தாளில் உள்ளபடி) | 1,48,49,124 |
| 2 | அலுவலக கட்டிட வாடகை<br><br>(பொதுப் பணித்துறையின் பரிந்துரையின் பேரில் நிர்ணயம் செய்யப்படும்) | 0 |
| 3 | மின்சாரக் கட்டணம் | 1,20,000 |
| 4 | எரிபொருள் (டீசல்) (2 வாகனங்களுக்கு) | 1,92,000 |
| 5 | தொலைபேசி கட்டணம் | 25,500 |
| | மொத்தம் | **1,51,86,624** |

ஆ) தொடராச் செலவினங்கள்

| வ.எண். | இனம் | உத்தேச ஆண்டு செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | தளவாடங்கள் | 4,00,000 |
| 2 | ஈப்பு –2 | 12,61,446 |
| 3 | தொலைபேசி இணைப்பு | 6,000 |
| 4 | கணினி | 75,000 |
| 5 | பிரிண்டர் (அச்சுப் பதிப்பு இயந்திரம்) | 30,000 |
| 6 | ஜெராக்ஸ் இயந்திரம் | 65,000 |
| 7 | பேக்ஸ் இயந்திரம் (தொலையச்சு இயந்திரம்) | 10,000 |
| 8 | குளிர்சாதனம் | 25,000 |
| 9 | தீயணைப்பான் | 10,000 |
| | மொத்தம் | **18,82,446** |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - IV

**அரசாணை (நிலை) எண்.61, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019**

**ஆட்சி எல்லை பட்டியல்**

| வ. எண் | விவரங்கள் | வட்டம் | | | அரசாணை (நிலை) எண்.279, வருவாய்த்துறை, நாள் 09.06.2003–இன் படியான அளவுகோல்கள் |
|---|---|---|---|---|---|
| | | தற்போது உள்ளபடி | உத்தேசிக்கப்பட்ட வட்டம் | எஞ்சிய வட்டம் | |
| 1) | தலைமையிடம் | பள்ளிப்பட்டு | ஆர்.கே.பேட்டை | பள்ளிப்பட்டு | |
| 2) | பரப்பளவு (ச.கி.மீ.) | 329.998 | 170.417 | 159.581 | குறைந்த அளவு 250 ச.கி.மீ. முதல் அதிக அளவு 2000 ச.கி.மீ. |
| 3) | மக்கள் தொகை | 1,82,203 | 1,01,182 | 81,021 | குறைந்த அளவு 1 லட்சம் முதல் அதிக அளவு 5.5 லட்சம் |
| 4) | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருத்தணி | திருத்தணி | திருத்தணி | |
| 5) | சட்டமன்ற தொகுதியின் பெயர் | திருத்தணி | திருத்தணி | திருத்தணி | |
| 6) | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | அரக்கோணம் | அரக்கோணம் | அரக்கோணம் | |
| 7) | நகராட்சிகளின் எண்ணிக்கை (பெயருடன்) | --- | --- | --- | |
| 8) | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | இரண்டு பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை | ஒன்று ஆர்.கே.பேட்டை | ஒன்று பள்ளிப்பட்டு | 2 அல்லது 3 முழு ஊராட்சி ஒன்றியங்கள் |
| 9) | சிறப்பு (பேரூராட்சி) பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை (பெயருடன்) | இரண்டு பள்ளிப்பட்டு, பொதட்டூர் பேட்டை | --- | இரண்டு பள்ளிப்பட்டு, பொதட்டூர் பேட்டை | |
| 10) | உள் வட்டங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | ஐந்து பள்ளிப்பட்டு, பொதட்டூர் பேட்டை, ஆர்.கே. பேட்டை, எரும்பி, பாலாபுரம் | மூன்று ஆர்.கே.பேட்டை, எரும்பி, பாலாபுரம் | இரண்டு பள்ளிப்பட்டு, பொதட்டூர் பேட்டை | |
| 11) | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | வருவாய் கிராமங்கள் 42, மதுரா கிராமங்கள் 28 மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 70 | வருவாய் கிராமங்கள் 22, மதுரா கிராமங்கள் 15 மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 37 | வருவாய் கிராமங்கள் 20, மதுரா கிராமங்கள் 13 மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 33 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |
| 12) | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 70 | 37 | 33 | |
| 13) | தலைமையிடத்தில் இருந்து வெகு தொலைவிலுள்ள கிராமத்தின் தூரம் | மைலார்வாடா - 65 கி.மீ. தூரம் | மைலார்வாடா - 42 கி.மீ. தூரம் | கிருஷ்ணம ராஜுகுப்பம் - 22 கி.மீ. தூரம் | |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - V

**அரசாணை (நிலை) எண்.61, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019**

**அறிவிக்கை – I**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிப்பட்டு வட்டத்தினை பிரித்து 2019–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18–ஆம் நாளிலிருந்து ஆர்.கே.பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஆர்.கே.பேட்டை புதிய வருவாய் வட்டம் கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வருவாய் / மதுரா கிராமங்களை தனது ஆட்சி எல்லைகளாக கொண்டு செயல்படும்.

| வ. எண் | வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வ. எண் | வருவாய் / மதுரா கிராமத்தின் எண் | வருவாய் / மதுரா கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆர்.கே. பேட்டை | ஆர்.கே. பேட்டை | 1 | 42 | ஜி.சி.எஸ்.கண்டிகை - ஏ |
| | | | 2 | 42 | ஜி.சி.எஸ்.கண்டிகை - பி |
| | | | 3 | 41 | வங்கனூர் |
| | | | 4 | 40 | எஸ்.வி.ஜி.புரம் |
| | | | 5 | 38 | வெள்ளாத்தூர் |
| | | | 6 | 38 | அம்மனேரி (வெள்ளாத்தூர் குரூப்) |
| | | | 7 | 38 | ஆதிவராகபுரம் (வெள்ளாத்தூர் குரூப்) |
| | | | 8 | 37 | விளக்கணாம்பூடி |
| | | | 9 | 37 | செல்லாத்தூர் (விளக்கணாம்பூடி குரூப்) |
| | | | 10 | 21 | இராஜா நகரம் |
| | | | 11 | 21 | காண்டாபுரம் (ராஜாநகரம் குருப்) |
| | | | 12 | 22 | அம்மையார்குப்பம் -ஏ பிளாக் |
| | | | 13 | 22 | ராகவநாயுடு குப்பம் (அம்மையார்குப்பம் பி பிளாக்) |
| | | | 14 | 22 | ஜனகராஜகுப்பம் (அம்மையார்குப்பம் சி பிளாக்) |
| 2 | | பாலாபுரம் | 15 | 23 | கதனநகரம்-ஏ பிளாக் |
| | | | 16 | 23 | பாலாபுரம் (கதனநகரம்-பி பிளாக்) |
| | | | 17 | 24 | மகன்காளிகாபுரம் |
| | | | 18 | 25 | வீரமங்கலம்-ஏ பிளாக் |
| | | | 19 | 25 | வீரமங்கலம்-பி பிளாக் |
| | | | 20 | 26 | பெத்தநாகபூடி |
| | | | 21 | 27 | தேவலாம்பாபுரம் |
| | | | 22 | 28 | வேணுகோபாலபுரம் |
| | | | 23 | 29 | வெடியங்காடு |
| | | | 24 | 30 | பைவலசா |
| | | | 25 | 36 | ஸ்ரீகாளிகாபுரம் |
| 3 | | எரும்பி | 26 | 31 | மைலார்வாடா (கிழக்கு) |
| | | | 27 | 31 | மைலார்வாடா (மேற்கு) |
| | | | 28 | 32 | பெத்தராமாபுரம் |
| | | | 29 | 33 | மீசரகண்டாபுரம் ஏ பிளாக் |
| | | | 30 | 33 | சாணூர்மல்லாவரம் பி பிளாக் (மீசரகண்டாபுரம் பி பிளாக்) |
| | | | 31 | 34 | பத்மாபுரம் |
| | | | 32 | 35 | அஸ்வரேவந்தாபுரம் ஏ பிளாக் |
| | | | 33 | 35 | சகஸ்ரபத்மாபுரம் (அஸ்வரேவந்தாபுரம் பி பிளாக்) |
| | | | 34 | 39 | வீராணத்தூர் ஏ பிளாக் |
| | | | 35 | 39 | அய்யனேரி (கிழக்கு) (வீராணத்தூர் பி பிளாக்) |
| | | | 36 | 39 | அய்யனேரி (மேற்கு) (வீராணத்தூர் சி பிளாக்) |
| | | | 37 | 39 | ஸ்ரீவிலாசபுரம் (வீராணத்தூர் டி பிளாக்) |

புதிய ஆர்.கே.பேட்டை வருவாய் வட்டத்தில் உள்ளடக்கும் ஆர்.கே.பேட்டை, பாலாபுரம் மற்றும் எரும்பி ஆகிய குறுவட்டங்கள் மீது தற்போது பள்ளிப்பட்டு வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் 2019–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18–ஆம் நாளிலிருந்து ஆர்.கே.பேட்டை வட்டாட்சியரால் கையாளப்படும்.

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

18/2/19

அரசாணை (நிலை) எண்.61, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019

## அறிவிக்கை–II

பள்ளிப்பட்டு வட்டத்தில் வட்டப்பிரிவினைக்கு முன் உள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரம்

| வ. எண் | வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வ. எண் | வருவாய் / மதுரா கிராமத்தின் எண் மற்றும் பெயர் | |
|---|---|---|---|---|---|
| 1 | பள்ளிப்பட்டு | பள்ளிப்பட்டு | 1 | 1 | வெங்கட்ராஜகுப்பம் |
| | | | 2 | 2 | வெளியகரம் |
| | | | 3 | 2 | இருதலைவாரிப்பட்டடை (வெளியகரம் குரூப்) |
| | | | 4 | 3 | புதுப்பட்டு (பள்ளிப்பட்டுகுரூப்) |
| | | | 5 | 3 | தளவாய்ப்பட்டடை (பள்ளிப்பட்டு குரூப்) |
| | | | 6 | 3 | ஈச்சம்பாடி (பள்ளிப்பட்டுகுரூப்) |
| | | | 7 | 4 | பெருமாநெல்லூர் |
| | | | 8 | 4 | குமாரராஜீப்பேட்டை (பெருமாநெல்லூர் குரூப்) |
| | | | 9 | 4 | திருமால்ராஜீப்பேட்டை (பெருமாநெல்லூர் குரூப்) |
| | | | 10 | 5 | கொளத்தூர் |
| | | | 11 | 5 | மேளப்பூடி (கொளத்தூர் குரூப்) |
| | | | 12 | 6 | நெடியம் |
| | | | 13 | 6 | சாமந்தவாடா (நெடியம் குரூப்) |
| | | | 14 | 6 | கீழப்பூடி (நெடியம் குரூப்) |
| | | | 15 | 7 | கரிம்பேடு |
| | | | 16 | 7 | புண்ணியம் (கரீம்பேடு குரூப்) |
| | | | 17 | 13 | கர்லம்பாக்கம் |
| 2 | | பொதட்டூர்பேட்டை | 18 | 8 | கொல்லால குப்பம் |
| | | | 19 | 9 | பாண்டரவேடு |
| | | | 20 | 10 | பேட்டைக் கண்டிகை |
| | | | 21 | 10 | காக்களூர் (பேட்டை கண்டிகை - பி) |
| | | | 22 | 11 | பொதட்டூர்பேட்டை (கிழக்கு) |
| | | | 23 | 11 | பொதட்டூர்பேட்டை (மேற்கு) |
| | | | 24 | 12 | கோணசமுத்திரம் -ஏ |
| | | | 25 | 12 | கொத்தகுப்பம் (கோணசமுத்திரம்-பி) |
| | | | 26 | 14 | அத்திமாஞ்சேரி |
| | | | 27 | 15 | கொடிவலசா |
| | | | 28 | 16 | நொச்சிலி (கிழக்கு) |
| | | | 29 | 16 | நொச்சிலி (மேற்கு) |
| | | | 30 | 17 | நெடுகல் |
| | | | 31 | 18 | கீச்சலம் |
| | | | 32 | 19 | ராமசமுத்திரம் |
| | | | 33 | 20 | கிருஷ்ணமராஜகுப்பம் |
| 3 | | ஆர்.கே.பேட்டை | 34 | 42 | ஜி.சி.எஸ்.கண்டிகை - ஏ |
| | | | 35 | 42 | ஜி.சி.எஸ்.கண்டிகை - பி |
| | | | 36 | 41 | வங்கனூர் |
| | | | 37 | 40 | எஸ்.வி.ஜி.புரம் |
| | | | 38 | 38 | வெள்ளாத்தூர் |
| | | | 39 | 38 | அம்மனேரி (வெள்ளாத்தூர் குரூப்) |
| | | | 40 | 38 | ஆதிவராகபுரம் (வெள்ளாத்தூர் குரூப்) |

//த.பி.பா.//

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 41 | 37 | விளக்கணாம்பூடி |
| | | | 42 | 37 | செல்லாத்தூர் (விளக்கணாம்பூடி குரூப்) |
| | | | 43 | 21 | இராஜா நகரம் |
| | | | 44 | 21 | காண்டாபுரம் (ராஜாநகரம் குருப்) |
| | | | 45 | 22 | அம்மையார்குப்பம் -ஏ பிளாக் |
| | | | 46 | 22 | ராகவநாயுடு குப்பம் (அம்மையார்குப்பம் பி பிளாக்) |
| | | | 47 | 22 | ஜனகராஜகுப்பம் (அம்மையார்குப்பம் சி பிளாக்) |
| 4 | | பாலாபுரம் | 48 | 23 | கதனநகரம்-ஏ பிளாக் |
| | | | 49 | 23 | பாலாபுரம்(கதனநகரம்-பி பிளாக்) |
| | | | 50 | 24 | மகன்காளிகாபுரம் |
| | | | 51 | 25 | வீரமங்கலம்-ஏ பிளாக் |
| | | | 52 | 25 | வீரமங்கலம்-பி பிளாக் |
| | பள்ளிப்பட்டு | | 53 | 26 | பெத்தநாகபூடி |
| | | | 54 | 27 | தேவலாம்பாபுரம் |
| | | | 55 | 28 | வேணுகோபாலபுரம் |
| | | | 56 | 29 | வெடியங்காடு |
| | | | 57 | 30 | பைவலசா |
| | | | 58 | 36 | ஸ்ரீகாளிகாபுரம் |
| 5 | | எரும்பி | 59 | 31 | மைலார்வாடா (கிழக்கு) |
| | | | 60 | 31 | மைலார்வாடா (மேற்கு) |
| | | | 61 | 32 | பெத்தராமாபுரம் |
| | | | 62 | 33 | மீசரகண்டாபுரம் ஏ பிளாக் |
| | | | 63 | 33 | சாணூர்மல்லாவரம் பி பிளாக் (மீசரகண்டாபுரம் பி பிளாக்) |
| | | | 64 | 34 | பத்மாபுரம் |
| | | | 65 | 35 | அஸ்வரேவந்தாபுரம் ஏ பிளாக் |
| | | | 66 | 35 | சகஸ்ரபத்மாபுரம் (அஸ்வரேவந்தாபுரம் பி பிளாக்) |
| | | | 67 | 39 | வீராணத்தூர் ஏ பிளாக் |
| | | | 68 | 39 | அய்யனேரி (கிழக்கு) (வீராணத்தூர் பி பிளாக்) |
| | | | 69 | 39 | அய்யனேரி (மேற்கு) (வீராணத்தூர் சி பிளாக்) |
| | | | 70 | 39 | ஸ்ரீவிலாசபுரம் (வீராணத்தூர் டி பிளாக்) |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

அரசாணை (நிலை) எண்.61, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019

## அறிவிக்கை—III

பள்ளிப்பட்டு வட்டத்தில் வட்டப்பிரிவினைக்கு பின் உள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரம்

| வ. எண் | வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வ. எண் | வருவாய் / மதுரா கிராமத்தின் எண் மற்றும் பெயர் | |
|---|---|---|---|---|---|
| 1 | பள்ளிப்பட்டு | பள்ளிப்பட்டு | 1 | 1 | வெங்கட்ராஜகுப்பம் |
| | | | 2 | 2 | வெளியகரம் |
| | | | 3 | 2 | இருதலைவாரிப்பட்டடை (வெளியகரம் குரூப்) |
| | | | 4 | 3 | புதுப்பட்டு (பள்ளிப்பட்டுகுரூப்) |
| | | | 5 | 3 | தளவாய்ப்பட்டடை (பள்ளிப்பட்டு குரூப்) |
| | | | 6 | 3 | ஈச்சம்பாடி (பள்ளிப்பட்டுகுரூப்) |
| | | | 7 | 4 | பெருமாநெல்லூர் |
| | | | 8 | 4 | குமாரராஜீப்பேட்டை (பெருமாநெல்லூர் குரூப்) |
| | | | 9 | 4 | திருமால்ராஜீப்பேட்டை (பெருமாநெல்லூர் குரூப்) |
| | | | 10 | 5 | கொளத்தூர் |
| | | | 11 | 5 | மேளப்பூடி (கொளத்தூர் குரூப்) |
| | | | 12 | 6 | நெடியம் |
| | | | 13 | 6 | சாமந்தவாடா (நெடியம் குரூப்) |
| | | | 14 | 6 | கீழப்பூடி (நெடியம் குரூப்) |
| | | | 15 | 7 | கரிம்பேடு |
| | | | 16 | 7 | புண்ணியம் (கரீம்பேடு குரூப்) |
| | | | 17 | 13 | கர்லம்பாக்கம் |
| | | பொதட்டூர்பேட்டை | 18 | 8 | கொல்லால குப்பம் |
| | | | 19 | 9 | பாண்டரவேடு |
| | | | 20 | 10 | பேட்டைக் கண்டிகை |
| | | | 21 | 10 | காக்களூர் (பேட்டை கண்டிகை - பி) |
| | | | 22 | 11 | பொதட்டூர்பேட்டை (கிழக்கு) |
| | | | 23 | 11 | பொதட்டூர்பேட்டை (மேற்கு) |
| | | | 24 | 12 | கோணசமுத்திரம் -ஏ |
| | | | 25 | 12 | கொத்தகுப்பம் (கோணசமுத்திரம்-பி) |
| | | | 26 | 14 | அத்திமாஞ்சேரி |
| | | | 27 | 15 | கொடிவலசா |
| | | | 28 | 16 | நொச்சிலி (கிழக்கு) |
| | | | 29 | 16 | நொச்சிலி (மேற்கு) |
| | | | 30 | 17 | நெடுகல் |
| | | | 31 | 18 | கீச்சலம் |
| | | | 32 | 19 | ராமசமுத்திரம் |
| | | | 33 | 20 | கிருஷ்ணமராஜகுப்பம் |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.